03.08.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கரும்பு பயிரில் குருத்துப்புழு, செவ்வழுகல் நோய் கட்டுப்படுத்த வேளாண் துறை அறிவுரை**

பழனி சுற்றுப்பகுதியில் கரும்பு பயிரில் ஏற்படும் குருத்துப்புழு மற்றும் செவ்வழுகல் நோயை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் அலுவலகம் அறிவுரை வழங்கியுள்ளது.இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் சுருளியப்பன் தெரிவித்தது: தற்போது கரும்பில் குருத்துப்புழு மற்றும் செவ்வழுகல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. குருத்துப்புழு தாக்கினால் நடுக்குருத்து காய்ந்து கையோடு வந்து விடும். ஆகவே மண் அணைத்து கார்போமயூரான் 3ஜி குருணையை ஏக்கருக்கு 10கிலோ பயிரருகில் இட்டு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். திரவமருந்து தெளிப்பதாயின் குளோரி பயரிபாஃஸ ஒரு லிட்டர் நீரில் 4 மில்லி வீதம் கலந்து தெளிக்கவேண்டும். செவ்வழுகல் நோய் தாக்கினால் 21 நாள்களுக்கு பின்னரே தெரியவரும். சோகைகள் கீழிருந்து மேல்நோக்கி ஆரஞ்சு நிறம் கலந்து மஞ்சள் நிறத்துடன் காய ஆரம்பிக்கும். கரும்பின் நடுப்பகுதியில் சிவப்பு நிற கோடுகள் காணப்படும். மேலும் சாராய நெடி வீசும். இதனால் மகசூல் வெகுவாக பாதிக்கும். இதை சரிசெய்ய முதலில் நோய்தாக்காத கரும்பிலிருந்து கரணைகள் தேர்வு செய்ய வேண்டும். தூர் அகற்றிய இடத்தில் கார்பன்டைசிம்-50 என்.பி., மருந்தினை ஒரு லிட்டர் நீருடன் ஒருகிராம் மருந்தை கலந்து ஊற்ற வேண்டும். ஏக்கருக்கு கார்பன்டைசிம்-50 என்பி.,யை 125 கிராம் எடுத்து 250 லிட்டர் நீரில்

கலந்து விதைக்கரணைகளை ஐந்து நிமிடம் ஊறவைத்து பின் விதைக்க வேண்டும்.

முன்னதாக நோய்தாக்கிய சோகைகளை அழிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு பழனி வேளாண் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களை சந்தித்து ஆலோசனை பெறலாம்.

## வேளாண் துறை மானியம் பெற ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை அவசியம்

பழனி வட்டாரத்தில் வேளாண்துறையின் மானியங்கள் பெற ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண்துறை உதவி இயக்குநர் சுருளியப்பன் வெளியிட்டுள்ள அறிக்கை: பழனி வட்டாரத்தில் வேளாண் துறை மூலமாக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் பயறுகள், தேசிய உணவுப்பாதுகாப்பு திட்டம், திருந்திய நெல் சாகுபடி, எண்ணைய் வித்து உற்பத்தித் திட்டம், விதை கிராமத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. இந்த திட்டங்களில் பங்கேற்று விவசாயிகள் பயன் பெற விரும்பும் நிலையில் அவர்கள் தங்கள் பெயரை பதிவேட்டில் பதிவு செய்வது அவசியமாகும். பதிவு செய்யும் போது பட்டா, சிட்டா, அடங்கல், போட்டோவுடன் இனிமேல் அவரவர் ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஒளிநகலை கட்டாயம் கொண்டு வரவேண்டும் என தெரிவித்துள்ளார்.

## தமிழகம், புதுவையில் சில இடங்களில் இன்று மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

தமிழகம், புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவல்: தமிழகம், புதுவையில் ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேக மூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் சிதம்பரம், கொள்ளிடத்தில் 70 மி.மீ. மழையும் சேந்தியாதோப்பு, சீர்காழியில் 60 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

இதேபோல, திண்டிவனம், போச்சம்பள்ளி, திருமங்கலம், விருதாச்சலம் (50 மி.மீ.), சாத்தனூர் அணை, உளுந்தூர்பேட்டை, புதுச்சேரி, கள்ளிக்குறிச்சி (40 மி.மீ.), மகாபலிபுரம், சங்கராபுரம், திருப்பத்தூர் (30 மி.மீ.), கோபிசெட்டிபாளையம், திருக்கோயிலூர், ராசிபுரம், செய்யாறு (20 மி.மீ.), ஆலங்காயம், பாரூர், கலவை, ஆம்பூர், செஞ்சி, வாணியம்பாடி, ஆவடி, தாம்பரம், பூந்தமல்லி, எண்ணூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வந்தவாசி, வேலூர், பண்ருட்டி, கடலூர், அரூர், சென்னை, மேட்டூர் (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**கூட்டுறவு சங்கங்களில் 11,900 டன் உணவு தானியம் சேமிப்பு வசதி**

தேனி மாவட்டத்துக்கு உள்பட்ட 90 கூட்டுறவு சங்கங்களில் மொத்தம் 11 ஆயிரத்து 900 டன் உணவு தானியங்களை சேமிக்கும் வசதியுள்ள ஊரக கிட்டங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது குறித்து மாவட்ட கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கூறியது: மாவட்டத்துக்கு உள்பட்ட 90 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் நபார்டு வங்கி மூலம் ஊரக உள்கட்டமைப்பு நிதி உதவி திட்டத்தின் கீழ், மொத்தம் 11 ஆயிரத்து 900 டன் உணவு தானியங்களை சேமிக்கும் வசதியுள்ள கிட்டங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரக கிட்டங்களில் உணவு தானியங்களை இருப்பு வைக்கும் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. 2015-16-ம் ஆண்டில் இதுவரை 187 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.2.10 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஊரகக் கிட்டங்கிகளுக்கு தேசிய கிட்டங்கிகள் மேம்பாட்டு கண்காணிப்பு அமைப்பு தரச் சான்றிதழ் வழங்குகிறது. மாவட்டத்தில் இதுவரை 6 கூட்டுறவு சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ள ஊரகக் கிட்டங்கிகளுக்கு தரச்சான்று பெறப்பட்டுள்ளது. 29 சங்கங்களில் உள்ள கிட்டங்கிகளுக்கு தரச்சான்று பெற முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தரச்சான்று பெற்ற ஊரக கிட்டங்கிகளில் இருப்பு வைக்கப்படும் தானியங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான 14 சதவிகிதம் வட்டியில், விவசாயிகள் 7 சதவிகிதம் வட்டி செலுத்தினால் போதுமானது. நபார்டு வங்கி மூலம் விவசாயிகள் சார்பில் 7 சதவிகிதம் வட்டி கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது என்றனர்.

## உயிரித் தொழில்நுட்பப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி இன்று தொடக்கம்

உயிரித் தொழில்நுட்பப் பொருள்கள் தயாரிப்பதற்கான தொழில்முனைவோர் பயிற்சி திங்கள்கிழமை (ஆக.3) தொடங்க உள்ளது என்று சிறு, குறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தெரிவித்தது. இதுகுறித்து சிறு, குறு தொழில் வளர்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பு:

மத்திய சிறு, குறு தொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் உயிரித் தொழில்நுட்பப் பொருள்கள் தயாரிப்பதற்கான தொழில்முனைவோர் பயிற்சி ஆகஸ்ட் 3 முதல் ஆகஸ்ட் 7 வரை நடக்க உள்ளது. இதில், இயற்கை உரங்களை பயன்படுத்தும் விவசாயிகள், சிறு, குறு, பன்னாட்டு, தனியார் உள்ளிட்ட தொழில்முனைவோர் கலந்து கொண்டு பயன் பெறலாம். இந்தப் பயிற்சியின் போது, உயிரி வேதி உரம், தொழில்சாலை நொதிகள், நுண்ணுயிர் பூச்சிக் கொல்லி மருந்துகள், இயற்கை உயிர் உரங்கள், கடல் சார்ந்த திரவ உரங்கள், திட கழிவு

உரங்கள் உள்ளிட்ட பல்வேறு உயிரித் தொழில் நுட்பப் பொருள்கள் தயாரிப்பதற்கு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு, 89393-56245, 99413-39788 என்ற செல்லிடப்பேசியிலும், கிண்டி, ஜிஎஸ்டி சாலையிலுள்ள சிறு, குறு தொழில் வளர்ச்சி நிறுவன உதவி இயக்குநரைத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை

வெள்ளக்கோவிலில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நுகர்வோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மளிகைக் கடைகள், பேக்கரி, டீ-க்கடைகள், பழக்கடைகள், பெட்டிக் கடைகளில் பாக்கெட்டுகளில் அடைத்து பால், மோர், தயிர், பழச்சாறுகள் உள்ளிட்டவைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் பல பொருள்கள் காலாவதியாகியும், தரமில்லாமலும் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து, விற்கப்படுகின்றன. இத்தகைய பொருள்களில் தயாரிப்பு நிறுவனம், தயாரிக்கப்பட்ட தேதி, காலாவதியாகும் தேதி, அதிகபட்ச விலை உள்ளிட்ட விவரங்கள் ஏதும் கிடையாது. பிரபல நிறுவனங்களின் பெயரில் போலியான தயாரிப்புகளும் புழக்கத்தில் உள்ளன. பொதுமக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையம், தாற்காலிக திருவிழாக் கடைகளில் இத்தகைய போலிப் பொருள்கள் அதிகளவில் விற்பனை ஆகின்றன. மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் டம்ளர், பாலித்தீன் கவர்களும் தாராளமாகக் கிடைத்து வருகின்றன. எனவே நகராட்சி சுகாதாரத் துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெள்ளக்கோவில் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

**பால் உற்பத்தியில் ஆர்வம் குறைவினால் மாடுகள் விலை குறைவு**

பால் உற்பத்தியில் விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்து வருவதால், கறவை மாடுகளின் விலை குறைந்து வருகிறது. கடந்தாண்டு நல்ல மழை பெய்ததால் பெரும்பாலான விவசாயிகள் மாடு வளர்ப்பில் ஆர்வம் காட்டினர். மாடுகளுக்கான தேவை அதிகரித்ததால் ரூ. 35,000 முதல் ரூ. 75,000 வரை மாடு விலை உயர்ந்தது. இறைச்சிக்காக அடிமாடாக செல்ல இருந்த மாடுகளும் கூட, தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தன.

தற்போது, மாடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, பசுந்தீவனங்களின் அபரிமிதமான உற்பத்தி போன்றவற்றால் தமிழகத்தில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், பால் விலை சரிவைக் கண்டுள்ளது. பாலுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காததால் கறவை மாடு வளர்க்கும் விவசாயிகள் மத்தியில் ஆர்வம் குறைந்து, தங்களிடம் இருக்கும் மாடுகளை விற்க முடிவு செய்துள்ளனர். இதன் காரணமாக மாடுகளின் விலை குறைந்துள்ளது. தற்போது மாடு விலை அதிகபட்சமாக ரூ. 45,000-ஆக இருப்பதாக மாட்டு வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சிறுதானிய விதைப்பண்ணை அமைக்க பயிற்சி**

காரியாபட்டி சிறுதானிய விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் விவசாயிகளுக்கு விதைப்பண்ணை அமைப்பதற்கான பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சு.செண்பகராஜ் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குநர்(விற்பனை மற்றும் வணிகம்) க.முத்துமுனியாண்டி முன்னிலை வகித்தார். இதில், விதைச் சானறு உதவி இயக்குநர் ராமமூர்த்தி விதைப்பண்ணை அமைப்பதற்கான வழிமுறைகள் மற்றும் விதைச்சான்று சட்ட விதிமுறைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். இம்மாவட்டத்தில் இரண்டு விதைப்பண்ணை உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும், அதில் விவசாயிகள் அனைவரும் உறுப்பினராக சேர்ந்து பயனடைய வேண்டும் எனவும்

கேட்டுக் கொண்டார். ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் பா.ரவி, உதவி வேளாண் அலுவலர்கள் முருகன், பரமேஸ்வரன், முத்துகுரு ஆகியோர் செய்திருந்தனர். சிறுதானிய விவசாய உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர் கல்யாணி நன்றி கூறினார்.

**சத்தியமங்கலம் வனப்பகுதியில் சந்தன விதைகள் தூவ ஏற்பாடு**

சத்தியமங்கலம் வனப்பகுதியில் 1,400 ஹெக்டேர் பரப்பில் சந்தன விதைகள் தூவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஈரோடு மண்டல வனப் பாதுகாவலர் நாகராஜன் தெரிவித்தார். தமிழக வனத்துறை சார்பில், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கோவையில் ஆகஸ்ட் 21, 22, 23-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதி சுற்று போட்டிகள் ஈரோடு வ.உ.சி. மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் வீரர்களை தேர்வு செய்ய வந்த அவர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

ஈரோடு மாவட்ட வனப்பகுதியில் தற்போது 1,500-க்கும் அதிகமான யானைகள் உள்ளன. மான், கரடி, சிறுத்தை, காட்டு பன்றிகள் போன்ற பிற வன விலங்குகளும் அதிகளவில் உள்ளன.

கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால் வனத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. ஏற்கெனவே 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குட்டைகள் ஆங்காங்கே வனப்பகுதியில் உள்ளன. ஈரோடு வனப்பகுதியில் 3 குடிநீர்த் தொட்டிகள் அமைக்க தலா ரூ. 2 லட்சம் வீதம் ரூ. 6 லட்சத்தை அரசு ஒதுக்கி உள்ளது.

மேலும், யானைகள் கூட்டம் தண்ணீர் குடிப்பதற்காக கிராமங்கள் பக்கம் வராமல் தடுக்க ஈரோடு மாவட்ட வனப்பகுதியில் சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் வரை அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. எனினும் இவற்றின் நீளம் 2

மீட்டர் அளவே உள்ளதால் யானைகள் எளிதில் அதனை தாண்டி ஊருக்குள் புகுந்து கடும் சேதத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

எனவே இதை தடுக்க அகழிகளை 3 மீட்டர் அகலத்திற்கு அகலப்படுத்தும் பணி தொடங்கப்பட உள்ளது. மேலும், ஈரோடு மாவட்ட வனப்பகுதியில் கள்ளிச் செடிகளை அழிப்பதற்காக அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட வனப்பகுதிகளில் (சத்தியமங்கலம், அந்தியூர், கோபி) தலா 700 ஹெக்டேர் வீதம் 1,400 ஹெக்டேரில் சந்தன மர விதைகள் தூவும் பணிகள் வரும் அக்டோபரில் நடைபெற உள்ளது. ஓர் ஹெக்டேரில் 5 கிலோ சந்தனமர விதைகள் தூவப்படும்.

அந்தியூர் அருகில் உள்ள வரட்டு பள்ளம் அணை பகுதிக்கு தினமும் காலை, மாலை நேரங்களில் யானைகள் கூட்டமாக வருகின்றன. அந்த நேரங்களில் பொதுமக்கள் வாகனங்களில் செல்வதோ, நடந்து செல்வதோ கூடாது. குறிப்பாக மூலக்கடை, செல்லப்பம் பாளையம், ராமகவுண்டன் குட்டை ஆகிய பகுதிகளில் யானைகள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. வனப்பகுதி அருகில் இருக்கும் விவசாயிகள் பலாப்பழங்களை பயிரிட்டு சந்தைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். இந்நிலையில், வனப்பகுதியில் இருந்து வெளியே வரும் யானைகள், பலாப்பழ வாசனையை மோப்பம் பிடித்தப்படி வந்து வீடுகளை இடித்து சேதப்படுத்துகின்றன. எனவே, இதனை தடுக்க வனப்பகுதியில் இருக்கும் பொதுமக்கள் தங்களது வீடுகளில் பலாப்பழத்தை வைக்கக்கூடாது என்றார். இந்நிகழ்ச்சியில், ஆசனூர் புலிகள் சரணாலய துணை இயக்குநர் பத்மா உடனிருந்தார்.

**பாரம்பரிய உணவு முறைக்குத் திரும்பினால் உடல் நலத்தைப் பாதுகாக்கலாம்**

பாரம்பரிய உணவு முறைக்குத் திரும்பினால் உடல் நலத்தைப் பாதுகாக்கலாம் என்று சென்னை சித்த மருத்துவர் கு.சிவராமன் தெரிவித்தார்.

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் நடைபெறும் ஈரோடு புத்தகத் திருவிழாவின் 2-ஆம் நாள் சிந்தனை அரங்கில் "எனக்கான உணவு எது' என்னும் தலைப்பில் அவர் பேசியதாவது: சர்க்கரை நோயாளிகள் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தை நோக்கி முன்னேறி வருகிறது. இந்தியாவில் இறக்கும் 1,000 பேர்களில் 744 பேர் தொற்றா நோய்களால் இறப்பதாக புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரத்தக் கொதிப்பு, நாள்பட்ட நுரையீரல் நோய்கள் உள்ளிட்ட தொற்றா நோய்கள் இந்தியாவுக்கு மிகப்பெரிய சவாலாக மாறிவிட்டன. ஆசிய மரபணு உள்ளவர்களுக்கு சர்க்கரை நோய் நிச்சயம் வரும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். நமது பாரம்பரிய உணவு முறைகளில் இருந்து மெல்ல, மெல்ல விலகியது தான் இதற்கு முக்கிய காரணம். உணவு உற்பத்தி, பயிரிடும் முறை, உணவு பரிமாறும் முறை வரை நச்சு கலக்கப்படுகிறது.

தாய்ப்பாலில் இயற்கையாக குளுக்கோமைட்டின் என்னும் உப்பு உள்ளது. ஆனால், இதை செயற்கையாக தயாரித்து நூடுல்ஸ் தயாரித்ததால் தான் நச்சுத்தன்மை இருப்பது கண்டறியப்பட்டு இப்போது தடை செய்யப்பட்டுள்ளது. நோயைக் கண்டறிந்து, அதற்கேற்ற சுமை கொண்ட உணவை கொடுப்பது இந்திய மருத்துவ முறை. நமது உணவில் 4,000-க்கும் மேற்பட்ட ரசாயனம் கலந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இன்னும் 6 ஆண்டுகளுக்குள் பசுமைக் காய்கறிகளுக்கு மாற வேண்டும் என கேரள அரசு முடிவெடுத்துள்ளது.

இந்திய உணவுக் கழகம் நடத்திய ஆராய்ச்சியில், உலக நாடுகளில் தடை செய்யப்பட்ட 67 வகையான பூச்சிக்கொல்லி மருந்துகளை காய்கறிகள் உற்பத்தி செய்ய நாம் பயன்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. சிகரெட் பிடித்தாலும், மது அருந்தினாலும் புற்றுநோய் வரும்.

தமிழகத்தில் மட்டும் 1,60,000 வகை அரிசி இனங்கள் இருந்தன. 365-க்கும் மேற்பட்ட எள் இனங்கள் இருந்தன. ஆனால், அதை எல்லாம் நாம் இழந்துவிட்டோம். பாரம்பரிய உணவுகளான கேழ்வரகு, கம்பு போன்றவற்றை பயன்படுத்தினால் உடல் நலத்தைப் பாதுகாக்க முடியும் என்றார். விழாவில், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் தரேஷ் அகமதுவின் பணிகளைப் பாராட்டி, மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் பாராட்டு மடல் அளிக்கப்பட்டது. இதில், எஸ்.எஸ்.எம். கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.எஸ்.மதிவாணன், மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உச்சத்தில் வெங்காயம் விலை**

வெங்காயத்தின் விலை உச்சத்தில் உள்ளதால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

வடமாநிலங்களில் தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையின் காரணமாக, வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டு, வரத்தும் வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால், தமிழகத்தில் வெங்காயத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தமிழகம் முழுவதும் கடந்த சில வாரங்களாக சில்லரை விற்பனையில் பெரிய வெங்காயம் ரூ.40 முதல் ரூ.45 வரையிலும், சின்ன வெங்காயம் (சாம்பார் வெங்காயம்) ரூ.55 முதல் ரூ.60 வரையிலும் விற்பனையாகிறது. வெங்காயத்தின் விலை மேலும் அதிகரித்தால், நிலைமை இன்னும் மோசமாகும் என்ற அச்சத்தில் சாமானிய மக்கள் உள்ளனர். இதுகுறித்து வியாபாரிகளிடம் கேட்டபோது, நவம்பர், டிசம்பர் மாதங்களில் தான் வெங்காயம் அறுவடை செய்யப்படும். எனவே, அதுவரை விலை குறைய வாய்ப்பு இல்லை என்றனர்.

**பரமத்தி வேலூர் சந்தையில் கோழிகள் வரத்து அதிகரிப்பு**

பரமத்தி வேலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நாட்டுக் கோழிச் சந்தையில் கோழிகள் வரத்து அதிகமாக இருந்த போதும் திங்கள்கிழமை ஆடிப் பெருக்கால் கடந்த ஆண்டை விட விலை அதிகமாக விற்பனை செய்யப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

பரமத்தி வேலூர் சுற்றுப் பகுதியில் சண்டைக்குப் பயன்படுத்தப்படும் கோழிகள் வீடு, தோட்டங்களில் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பகுதியில் உள்ள நாட்டுக் கோழிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளதால் சண்டைக் கோழிகளை வாங்குவதற்கு வெளியூர்களில் இருந்து ஏராளமானோர் சந்தைக்கு வந்திருந்தனர்.

நாட்டுக் கோழிகள் கிலோ ரூ.300 முதல் 500 வரையிலும், தரமான கோழிகள் ரூ.500 முதல் ரூ.2 ஆயிரம் வரையிலும், சண்டைக் கோழிகள் ரூ.1,500 முதல் ரூ.5 ஆயிரம் வரையும் விற்பனை செய்யப்பட்டன.

புதுமணத் தம்பதிகளுக்காக ஆண்டுதோறும் ஆடிப் பெருக்கின்போது, தலை ஆடிக்காக அதிக அளவில் கோழிகளை வாங்கிச் செல்வது வழக்கம். அன்று நாட்டுக் கோழிகளின் தேவை அதிகமாக இருப்பதால், நாட்டுக் கோழி வளர்ப்போர் ஆடிப்பெருக்குக்கு முன் வரும் ஞாயிற்றுக்கிழமை அதிக அளவு கோழிகளைக் கொண்டு வந்து விற்பனை செய்வது வழக்கம்.

நிகழாண்டும் காலை 5 மணி முதலே நாட்டுக் கோழிச் சந்தைக்கு அதிக அளவில் கோழிகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. கடந்த ஆண்டை விட நிகழாண்டு நாட்டுக் கோழிகளின் விலை அதிகமாக இருந்ததாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

**தமிழ் மாநில விவசாய தொழிலாளர்கள் பேரவைக் கூட்டம்**

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் பேரவைக் கூட்டம் கிருஷ்ணகிரியை அடுத்த உத்தனப்பள்ளியில் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு அந்த சங்க நிர்வாகி முகேஷ் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் நா.பெரியசாமி, மாவட்டச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, கௌரவத் தலைவர் கண்ணு, பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் பி.கெம்பன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

கெலவரப்பள்ளி அணையிலிருந்து உத்தனப்பள்ளி சுற்றியுள்ள 15 ஏரிகளுக்கு பாசனக் கால்வாய் அமைத்து தண்ணீர் கொண்டுவர வேண்டும். ஊரக வேலை உறுதித் திட்டப் பணியை 200 நாள்களுக்கு நீட்டிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பில்லை**

மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு சனிக்கிழமை தண்ணீர் திறக்கப்படாததால் கால்வாய் பாசன விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் டிசம்பர் 15-ஆம் தேதிவரை 137 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். மேட்டூர் அணையின் கால்வாய் பாசனத்திற்கு 9.6 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். கால்வாய் பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகின்றன.

நிகழாண்டில், காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படாததால், சனிக்கிழமை மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால், மேட்டூர் அணையின் கால்வாய் பாசன விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். காவிரி டெல்டா பாசனத்துக்கு ஆகஸ்ட் 9-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு ஆகஸ்ட் 15-ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிட வாய்ப்பு உள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தநிலையில், சனிக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96.20 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 10,397 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர், ஆடிப்பெருக்கு விழாவுக்காக நொடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 60.02 டி.எம்.சி.யாக உள்ளது.

## "பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள பாரம்பரிய சாகுபடி முறையே உதவும்'

பாரம்பரிய சாகுபடி தொழில்நுட்பங்கள், நெல்ரகங்களால்தான் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள முடியும் என்றார் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வேளாண் கல்லூரி முன்னாள் முதல்வர் ராஜக்கண்ணு.

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அருகேயுள்ள கொழிஞ்சி இயற்கை சூழல் பண்ணையில் பருவநிலைக்கு உகந்த நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து குடும்பம் நிறுவன இயக்குநர் ஆஸ்வால்டு குவிண்டால் தலைமையில் அண்மையில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் பங்கேற்று அவர் மேலும் பேசியது:

கடந்த 4 ஆண்டுகளாக புதுகை மாவட்டத்தில் நிலவிய கடுமையான வறட்சியால் விவசாயிகள் நஷ்டமடைந்தனர். இந்நிலையில் நம் முன்னோர்கள் பின்பற்றி வந்த சாகுபடி முறையும், பாரம்பரிய நெல் ரகங்களும், பாரம்பரிய தொழில்நுட்பங்களுமே பருவநிலை மாற்றத்தை எதிர்கொண்டு சமாளித்து விவசாயிகளுக்கு பயனளித்தன என்பது பெருமைக்குரியது.

இந்த தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தவர்கள் மட்டுமே நெல் அறுவடை செய்ய முடிந்தது. எனவே பல்கலைக்கழகங்களும், வேளாண் துறையும் இந்த ரகங்களையும் தொழில்நுட்பங்களையும் ஆய்வு செய்வதிலும் விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் பணியிலும் ஈடுபட வேண்டும் என்றார். இதையடுத்து தாய்லாந்து நாட்டிலிருந்து வந்த எர்த் நெட் பவுண்டேசன் திட்ட ஒருங்கிணைப்பாளர் மைக்கேல்காமன்ஸ் பேசுகையில், விவசாயிகள் தங்களது விளைபொருள்களுக்கு நியாயமான விலை பெற வேண்டுமானால் உற்பத்தி மட்டுமல்லாமல் விளைபொருள்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்வதிலும் கூட்டாக ஈடுபட வேண்டும் என்றார். சாஸ்த்ரா பல்கலைகழகத்தின் உயிர் தகவலியல் துறைப் பேராசிரியர் சத்யா பருவநிலை மாற்றத்துக்கு உகந்த தொழில்நுட்பங்களை எடுத்துச் செல்வதற்கான அடுத்த மூன்று ஆண்டுக்கான செயல் திட்டம் குறித்து விளக்கமளித்தார். முன்னாள் வேளாண் இணை இயக்குநர் அங்குராஜன், குடும்பம் நிறுவன ஆலோசகர் ராமதாஸ் ஆகியோர் பேசினார்.

மாநாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட விவசாயிகளும், நிறுவனப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். மாநாட்டில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் பாரம்பரிய விதை நெல் தலா 5 கிலோ வீதம் வழங்கப்பட்டது.

**மருத்துவ குணங்களால் 1கிலோ ரூ.250-க்கு விற்பனையாகும் நாவல் பழம்**

நாவல் மரத்தின் பழம், இலை, மரப்பட்டை, விதை என அனைத்துமே மருத்துவக் குணங்கள் கொண்ட காரணத்தாலும், நாவல் மரங்கள் குறைந்து வருவதாலும், அதன் பழங்கள் தற்போது ஒரு கிலோ ரூ. 250-க்கு விற்பனை செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

நீரிழிவு நோயால் பாதிக்கப்படாதவர்கள் அரிதாகிவிட்ட நிலையில், நாவல் பழமும், விதைகளும் படிப்படியாக நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் சிறந்த மருந்தாக அறியப்பட்டுள்ளதால், அவற்றின் மதிப்பு தற்போது பன்மடங்கு உயர்ந்துவிட்டது.

நீரிழிவு நோய் தவிர, பெண்களுக்கு மாதவிடாயின் போது ஏற்படும் அதிகப்படியான ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்தும் குணமும், தொண்டைப் புண், தொண்டை அழற்சி போன்ற தொந்தரவுகளைப் போக்குவதற்கும் நாவல் மரப்பட்டைகள் உதவுகின்றன.

மேலும், சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல், சிறுநீர்க்கட்டால் அவதிப்படுவோர் நாவல் பழங்களை பிழிந்து சாப்பிடுவதன் மூலம் குணமடைகின்றனர். நாவல் பழத்துக்கு சிறுநீர் பெருக்கம், பசியைத் தூண்டும் தன்மை உண்டு. மேலும், நாக்கு மற்றும் பல் ஈறுகளைச் சுத்தம் செய்யும் தன்மையும், குடல், இரைப்பை, இதயத்தின் தசைகளை வலுவாக்கும் குணமும் நாவல் பழத்துக்கு உள்ளது.

அதோடு, நாவல் பழச்சாற்றுக்கு நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் குணமும், நாவல் மரத்தின் பட்டைக்கு நரம்பை பலப்படுத்தும் சக்தியும், மூச்சுக்குழல் அழற்சி, காசநோய், குடல் புண்கள் மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவற்றை குணமாக்கும் சக்தியும் உண்டு. மேலும், ரத்தம் சுத்தப்படுத்துதலிலும் நாவல் பழம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

அனைவராலும் மிகச் சாதாரணமாகக் கருதப்பட்ட நாவல் பழத்துக்கு இத்தகைய மருத்துவக் குணங்கள் உள்ளது என்ற விழிப்புணர்வு தற்போது

அனைவருக்கும் ஏற்பட்டுள்ளதே இந்த விலை உயர்வுக்கு முக்கிய காரணம் என்றார் இயற்கை விவசாயி ஜி.எஸ். தனபதி.

இதுகுறித்து புதுகை உழவர் சந்தை அருகே பழ வியாபாரம் செய்யும் பெண் கூறியது: நாட்டு நாவல் மரங்களில் இருந்து ஆடிக்காற்றில் கீழே விழும் பழங்களைத்தான் கிராமங்களில் விற்று வந்தோம். ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக நகர்ப்புறங்களில் நாவல் பழங்களுக்கு மிகுந்த முக்கியத்தும் கிடைத்துள்ளது. அதை வாங்குபவர்கள் சர்க்கரை நோய்க்கு மருந்தாகப் பயன்படுவதாகத் தெரிவித்தனர். இந்த நிலையில், நாவல்பழம் உள்ளூரின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாததால், ஆந்திர மாநிலத்திலிருந்து திருச்சி காந்தி சந்தைக்கு வரும் நாவல் பழங்களை வாங்கிவந்து விற்கிறோம். ஒரு கிலோ ரூ. 200-க்கு வாங்கி ரூ. 250-க்கு விற்க வேண்டியுள்ளது. எனினும், இதை வாங்கிச் செல்பவர்களின் எண்ணிக்கை குறையவில்லை என்றார் அவர்.

**வேளாண் கடன் சங்கங்கள் மூலம் ரூ.32 கோடி பயிர்க்கடன் அளிப்பு: ஆட்சியர்**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நிகழாண்டில் 4,447 விவசாயிகளுக்கு ரூ. 32 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் தரேஸ் அகமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் ஆட்சியர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் 1.7.2015 முதல் 21.7.2015 வரை நடைபெற்ற பயிர்க்கடன் முகாமில், இதுவரை பயிர்க்கடன் கேட்டு விண்ணப்பித்த 1,337 விவசாயிகளில் 105 விவசாயிகளுக்கு ரூ. 19.11 லட்சத்துக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதர விண்ணப்பதாரர்களுக்கு, தகுதி அடிப்படையில் பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், நிகழாண்டு வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூ. 110 கோடி பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரையில் 4,447 நபர்களுக்கு ரூ. 32 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. "ஒரு ஹெக்டேர் - ஒரு லட்சம்' திட்டத்தில், ஒரு ஹெக்டேரில் மக்காச்சோளத்தில் 10 டன் மகசூல் மற்றும் பருத்தியில் 25 குவிண்டால் சாகுபடி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன், தலா 1,000 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளனர்.

தேசிய தோட்டக்கலை திட்டத்தில் 350 ஹெக்டேரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 4.7.2015 ஆம் தேதி நடைபெற்ற முகாமில் 200 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், ஒரு ஹெக்டேருக்கு ரூ. 12,000 மானியம் வழங்கப்படும். உயிர் உரம் மற்றும் நுண்ணூட்டச்சத்து பாக்கெட்டுகள் வட்டார விரிவாக்க மையம் மூலமாக வழங்கப்படும்.

உரங்கள் தொடக்க வேளாண்மை சங்கங்களிலிருந்து பெற்றுத் தரப்படும். மீதமுள்ள தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்படும் என்றார் அவர்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச. மீனாட்சி, வேளாண்மை துணை இயக்குநர் (பொ) எஸ். ஆறுமுகம், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) மா. இந்திரா, மின்வாரிய செயற்பொறியாளர் எஸ். கண்ணன், கூட்டுறவுத்துறை துணைப்பதிவாளர் கிருஷ்ணசாமி உள்பட விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

**பெரம்பலூரில் விவசாயிகளுக்கு பசுந்தீவன பயிற்சி**

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், மண்டல தீவனப்பயிர் ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு பசுந்தீவன உற்பத்தி குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப.

விஜயலட்சுமி பயிற்சியை தொடக்கி வைத்தார். மண்டல தீவனப்பயிர் ஆராய்ச்சி நிலைய பண்ணை மேலாளர் ஸ்டீபன் பசுந்தீவன வங்கி அமைத்தல் குறித்தும், தொழில்நுட்ப வல்லுநர் டாக்டர் ஆதிலட்சுமி "கால்நடை வளர்ப்பில் பசுந்தீவனத்தின் பங்கு' என்ற தலைப்பிலும் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தீவனத் தட்டைப்பயிறு விதைகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இதில், பல்வேறு கிராமத்தைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டத்தில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு**

தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான தீவனப்பியர் அபிவிருத்தித் திட்டத்தில் பங்கேற்று விவசாயிகள் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார். இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கால்நடைகளுக்கான தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும், தமிழக அரசு கடந்த 4 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இறவையில் பல்லாண்டு தீவனசோளம் 29 மற்றும் வேலிமசால் சாகுபடி செய்ய தேவையான விதைகளும், 0.25 ஏக்கருக்கு உரமிடுவதற்கு மானியமாக ரூ. 410}ம் வழங்கப்படும். பயனாளி இறவைப் பாசனம் உள்ள கால்நடை வளர்ப்பவராக இருத்தல் வேண்டும். மானாவாரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் மற்றும் தீவன தட்டைப் பயறு சாகுபடி செய்திட தேவையான விதைகள் இலவசமாக வழங்கப்படும். தீவனப் பயிர் பயிரிட்ட விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் நிறுவுவதற்கு ரூ.18,750-ம் (75 சதவீதம்) மானியமாக வழங்கப்படும். பயனாளி குறைந்த பட்சம் 1 ஏக்கர் பரப்பில் பசுந்தீவனம் தொடர்ந்து 3 ஆண்டுகள் சாகுபடி செய்பவராகவும், நல்ல நீர் ஆதாரம் உள்ள ஆழ்குழாய் கிணறு அல்லது


திறந்தவெளி கிணறு உள்ளவராக இருத்தல் அவசியம். தீவன மர வகை கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். அசோலா திடல் அமைப்பதற்கு ரூ. 1,600-ம் மானியம் வழங்கப்படும். ஊறுகாய் புல் தயார் செய்வதற்கு ரூ.530-ம் மானியம் வழங்கப்படும். இந்தத் திட்டங்களில் விலையில்லா கறவை மாடு பெற்ற பயனாளிகள், சிறு, குறு விவசாயிகள், தாழ்த்தப்பட்டவர்கள், புதுவாழ்வு திட்டம் மூலம் பயன்பெற்ற கால்நடை வளர்க்கும் விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு திட்ட விதிமுறைகளுக்குள்பட்டு முன்னுரிமை வழங்கப்படும்.

விருப்பமுள்ளவர்கள் தங்கள் பகுதியைச் சேர்ந்த கால்நடை உதவி மருத்துவரை தொடர்பு கொண்டு எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்து பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உணவு கழகத்திற்கு ரூ.13,000 கோடி மானியம்**



புதுடில்லி:பொதுத் துறையை சேர்ந்த இந்திய உணவுக் கழகமான

எப்.சி.ஐ.,க்கு, மத்திய அரசு, 13 ஆயிரம் கோடி ரூபாய் மானியம்வழங்கியுள்ளது. நாடு முழுவதும், பொது வினியோக திட்டத்திற்கான உணவு தானியங்களை, கொள்முதல் செய்து, சேமித்து, வினியோகிக்கும் பணியில், எப்.சி.ஐ., ஈடுபட்டுள்ளது. அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையில், உணவு தானியங்களை வாங்க, எப்.சி.ஐ.,க்கு, மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது.

அதன்படி, கடந்த, 2014 - 15ம் நிதியாண்டில், மத்திய அரசு, 92 ஆயிரம் கோடி ரூபாய் மானியம் ஒதுக்கியது. அதில், 91,995 கோடி ரூபாய் வழங்கப்பட்டு விட்டது. ஆனால், மானியச் செலவு, 1,02,476 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. நடப்பு, 2015 - 16ம் நிதியாண்டில், மானியச் செலவு, 1,18,000 கோடி ரூபாயாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மத்திய அரசு, 97ஆயிரம் கோடி ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்துள்ளது. அதில், நான்காவது தவணையாக, தற்போது, 13 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, நடப்பு நிதியாண்டில், இதுவரை, 46,250 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளதாக, மத்திய நிதியமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். உணவு தானியங்களின் குறைந்தபட்ச கொள்முதல் விலை உயர்வு, சேமிப்பு கிடங்குகளின் கட்டணம் அதிகரிப்பு போன்றவற்றால், கடந்த சில ஆண்டுகளாக, எப்.சி.ஐ.,ன் நடைமுறைச் செலவினங்கள் அதிகரித்துள்ளன.

## வெங்காய விலை உயர்வு தொடரும்

புதுடில்லி : கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நாட்டில் வெங்காய விலை வெகுவாக உயர்ந்துள்ளது. டில்லியில் 25 சதவீதமும், மும்பை, கோல்கட்டா, சென்னை ஆகிய நகரங்களில் 50 சதவீதமும் அதிகரித்துள்ளது. மேலும் சில வாரங்களுக்கு இந்த விலை உயர்ந்து

தொடரும் என வெங்காய் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். வட மாநிலங்களில் பெய்து வரும் கனமழையும் வெங்காய விலை உயர்விற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. வெங்காய விலை தொடர்ந்து அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதற்காகவும், தேவையை சமாளிப்பதற்காகவும் 10,000 டன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

**விவசாயிகளை தொடாத தொடுதிரை**

தேனி:கிராமப்புற விவசாயிகளுக்கு எல்லா விதமான விவசாய தொழில்நுட்ப தகவல்கள் முறையாக சென்று சேர வேண்டும் என அரசு உத்தரவிட்டது.இதற்காக தற்போது விவசாய, தோட்டக்கலைத்தறையினர் விவசாயிகளை சந்தித்து தொழில்நுட்ப தகவல்களை வழங்கி வருகின்றனர். விவசாயிகளுக்கு எல்லா நேரங்களிலும் தொழில்நுட்ப தகவல்கள் கிடைக்கும் வகையில் கிராமங்கள் தோறும் தொடுதிரைகள் அமைக்க விவசாயத்துறை நடவடிக்கை எடுத்தது.இந்த தொடுதிரையில் எந்தெந்த சீசனில் என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்யலாம். இதற்கான தொழில்நுட்பங்கள், அரசு வழங்கும் மானியங்கள் என்ன என்பது உட்பட எல்லா விதமான தகவல்களும் தொடுதிரையில் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தை விவசாயிகள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்தனர். ஆனால் அறிவிப்போடு இத்திட்டம் நின்று விட்டது. கிராமங்களில் தொடுதிரைகள் அமைத்தால், விவசாயிகளுக்கு முழுமையான பலன்கள் கிடைக்கும்.

**கொப்பரை விலை உயர்வால் விவசாயிகள்.நிம்மதி!பண்டிகை வருவதால் ஏறும் என எதிர்பார்ப்பு**

ஓணம் பண்டிகை உள்ளிட்ட பண்டிகைகள் வர உள்ளதால், மார்க்கெட்டில், கொப்பரை மற்றும் தேங்காய்க்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. விலை மேலும் உயரும் என்ற எதிர்பார்ப்பும் விவசாயிகள் மத்தியில் நிலவி வருகிறது. பொள்ளாச்சி மற்றும் உடுமலை சுற்றுப் பகுதிகளில் தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது. இப்பகுதியில் இருந்து உள்ளூர் மட்டுமின்றி, வெளியூர், வெளி மாநிலங்களுக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. போதிய லாபம் கிடைத்து வந்ததால், விவசாயிகள் தென்னை சாகுபடியில் ஆர்வம் காட்டி வந்தனர். கடந்த சில ஆண்டாக பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு கைகொடுக்காததால், தென்னை சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டது. போதிய விலையில்லாதது மற்றும் வறட்சியால் தென்னை மரங்கள் பாதிப்பு போன்ற பிரச்னைகளினால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதனால், மார்க்கெட்டிற்கு தேங்காய் வரத்தும் முற்றிலும் குறைந்தது. இதன் விலையும் நிலையில்லாமல், மார்க்கெட்டில், ஏற்றம், இறக்கமாகவே காணப்பட்டது. உச்ச விலை

கடந்த சில ஆண்டுகளாக காணப்பட்ட வறட்சி போன்ற காரணங்களினால், தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து குறைவு போன்ற காரணங்களினால், மார்க்கெட்டில் இவற்றின் விலை உயர்ந்து காணப்பட்டது. விலை நன்றாக கிடைத்ததால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்திருந்தனர். மேலும், விலை உயரும் என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் காத்திருந்தனர். சரிந்தது விலைநல்ல விலையில் விற்பனை செய்யப்பட்ட கொப்பரை கடந்த சில மாதங்களாக திடீரென விலை சரிவை சந்தித்தது. விலை உயரும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றத்தினையும், அதிர்ச்சியினையும் ஏற்படுத்தியது. மீண்டும் விலை உயர்வு:விலை

சரிந்து, 58 ரூபாய் வரை வந்த கொப்பரை விலை தற்போது மீண்டும் உயர்ந்து வருவது விவசாயிகளிடையே ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.

காங்கேயம் மார்க்கெட் நேற்றுமுன்தினம் நிலவரப்படி: முதல் தர கொப்பரை 85 ரூபாய்க்கும்; இரண்டாம் தரம் 83 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரு டன் முதல் தர தேங்காய் (கருப்பு) 26 ஆயிரத்து 500 ரூபாய்க்கும்; இரண்டாம் தர தேங்காய் (பச்சை) 25 ஆயிரத்து 750 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ பவுடர் 128 ரூபாய்க்கும், ஒரு டின் எண்ணெய் முதல் தரம் தற்போது, 1,700 ரூபாய்க்கும்; இரண்டாம் தரம் 1,680 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.கடந்த சில மாதங்களாக குறைந்து காணப்பட்ட விலை மீண்டும் உயர்ந்துள்ளதால், தென்னை விவசாயிகள் நல்ல விலை மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கை கிடைத்துள்ளதாக தெரிவித்தனர்.

விலை உயர்வுக்கு காரணம்?

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலச்சங்க பிரதிநிதி கப்பளாங்கரை தங்கவேலு கூறியதாவது:

கேரளாவில், ஜன., பிப்., மார்ச் போன்ற மாதங்களும்; தமிழகத்தில், மார்ச், ஏப்., மே போன்ற மாதங்களும்; கர்நாடகாவில், ஜூன், ஜூலை, ஆகஸ்ட் போன்ற மாதங்களும் தென்னை சீசனாக உள்ளது.

இந்த மாதங்களில், தேங்காய் மற்றும் கொப்பரை அதிகளவு மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக கொண்டு வரப்படும். கடந்த சில மாதங்களாக வரத்து அதிகரிப்பு காரணமாக தேங்காய் மற்றும் கொப்பரை விலை குறைந்து காணப்பட்டதால், விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் நிலை காணப்பட்டது. இந்நிலையில், வடமாநிலங்களில், கொப்பரை தேவை அதிகரிப்பு, மார்க்கெட்டிற்கு வரத்து குறைவு, ஓணம் பண்டிகை போன்ற பல்வேறு காரணங்களினால், விலை மீண்டும் உயர்ந்து

வருகிறது. விவசாயிகள் ஒற்றுமையாக இருந்து குறைந்த விலைக்கு கேட்டால் கொப்பரை கொடுக்க மாட்டோம் என கூறியதும் விலை உயர்விற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

இனி வரும் காலங்களிலும் தென்னை விவசாயிகள் குறைந்த விலைக்கு கேட்டால் தேங்காய் மற்றும் கொப்பரை கொடுக்கக்கூடாது. விலை கிடைக்கும் போது கொடுத்தால் பலன் கிடைக்கும்.தொடர்ந்து பண்டிகை நாட்கள் வர உள்ளதால், விலை குறைய வாய்ப்பில்லை; மேலும் உயர்வதற்கான வாய்ப்புகளே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.-நமது நிருபர்-

## கேரளா, கோவாவிற்கு பயணமாகும் மத்தி மீன்

பழவேற்காடு: மீனவர்கள் வலையில் அதிகம் கிடைக்கும், சிறிய வகை மத்தி மீன்கள் ஆயுர்வேத சிகிச்சைகளுக்கு பயன்படும் எண்ணெய்க்காக கேரளா, கோவாவிற்கு பயணமாகின்றன.பழவேற்காடு கடலில், மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் வலையில் சிறிய வகை மத்தி மீன்கள் அதிக அளவில் கிடைக்கின்றன.இதுபோன்ற சிறிய வகை மத்தி மீன்கள் அதிகளவில் கேரளா மற்றும் கோவா மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.இவற்றில் தயாரிக்கப்படும் எண்ணெய் ஆயுர்வேத மருத்துவத்திற்கு பயன்படுவதாக கூறப்படுகிறது.அதேபோல், இந்த வகை மீன்கள், 'ஜிலோபியா' என்ற வகை மீன் வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் வாங்கி சென்று, அவைகளுக்கு தீவனமாக பயன்படுத்துகின்றனர்.பெரிய அளவில் இருக்கும் மத்தி மீன்கள் உலர வைக்கப்பட்டு கோழி மற்றும் இறால் தீவனங்களுக்கு யன்படுத்தப்படுகிறது.அதிக அளவில் இவ்வகை மீன்கள் கிடைத்தாலும், ஒரு கிலோ, 30 ரூபாய்க்கும் குறைவாக விற்பனையாவதால், எதிர்பார்த்த வருவாய் கிடைப்பதில்லை என்ற விரக்தி மீனவர்களிடம் உள்ளது.

**மண் பரிசோதனை அட்டை வழங்க நடவடிக்கை... மாவட்ட நிர்வாகத்தின் துரித முயற்சி வேண்டும்.**

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகளிடம் மண் பரிசோதனைக்காக கட்டணத் தொகை மற்றும் மாதிரி மண் வாங்கிய விவசாயிகளுக்கு விரைந்து மண் பரிசோதனை அட்டைகள் வழங்க மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தின் பரப்பளவில் பெரிய மாவட்டமான விழுப்புரத்தில், வேளாண்மையே பிரதான தொழிலாக உள்ளது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கட்டுப்பாட்டின் கீழ், 22 ஒன்றியங்களில் வேளாண்மை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த அலுவலகங்களில் வேளாண்மை உதவி இயக்குனர், வேளாண்மை அலுவலர்கள், உதவி விதை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.இந்த அலுவலகங்கள் மூலம், விவசாயிகளுக்கு தேவையான விதைகள் விற்பனை செய்வது, மண் பரிசோதனைகள் செய்வது, விவசாயிகளுக்கு தேவையான வேளாண் ஆலோசனைகள் வழங்குவது மற்றும் அரசின் மான்ய திட்டங்களை விவசாயிகளுக்கு வழங்குவது ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக ஆண்டு தோறும் மத்திய, மாநில அரசுகள் மூலம் பல கோடி ரூபாய் வேளாண் துறைக்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப மற்றும் குறைந்து வரும் வேளாண் நிலப்பரப்பைப் பயன்படுத்தி, மகசூலை அதிகரிக்க பல்வேறு தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மகசூலை அதிகரிப்பதற்கு மண் பரிசோதனை, சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் உள்ளிட்ட முக்கிய தொழில்நுட்பங்கள் வேளாண் துறை மூலம் பரிந்துரை செய்யப்படுகிறது. தரமான விதைகள் வழங்கினாலும், நிலத்தின் காரம் மற்றும் அமிலத்தன்மைகளை அறிந்து அதற்கு ஏற்ப உரங்கள் மற்றும் சாகுபடி பயிர்கள் பரிந்துரை செய்ய மண் பரிசோதனை இன்றியமையாததாக உள்ளது. இதற்காக கடந்த மூன்றாண்டுகளாக மண்

பரிசோதனை செய்ய, வேளாண் துறை சார்பில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. சிறப்பு மண் பரிசோதனை முகாம்கள், நடமாடும் மண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன.இதற்கான வட்டார வேளாண்மை அலுவலகங்கள் மூலம் அந்தந்தப் பகுதிகளில் உள்ள விசாயிகளிடம் நிலத்தின் அளவு, இருப்பிடச் சான்று உள்ளிட்டவை பெற்றுக் கொண்டு, மாதிரி மண் வகைகளையும் பெறப்பட்டது. இதற்கு கட்டணமாக விவசாயிகளிடம் தலா 30 ரூபாய் பணமும் பெறப்பட்டது. இருப்பினும் கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ந்து வேளாண் துறை சார்பில் மண் பரிசோதனை செய்து விவசாயிகளுக்கு பெரிதும் உதவுவது போல் விளம்பரம் செய்வதோடு நிறுத்திக் கொள்கின்றனர். ஆனால் பெரும்பாலான விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மாதிரி மண் ஆய்வு செய்து இதுவரை அவர்களுக்கு மண் பரிசோதனை அட்டைகள் வழங்காமல் உள்ளனர்.

மேலும் ஆடிப் பட்டத்தை முன்னிட்டு தற்போது விவசாயிகள் பல இடங்களில் விதைப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக விதைகளை பெரும்பாலான விவசாயிகள் தனியார் விதைப் பண்ணைகளிலேயே கொள்முதல் செய்ய வேண்டிய நிலை உள்ளது. அரசு வேளாண் அலுவலகங்கள் மூலம் ஆடிப்பட்டம் முடியும் போது, பெயரளவில் விதைகள் விற்பனை செய்ய துவங்குகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு பயன் இல்லை.எனவே வேளாண் துறை விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் துரிதமாக மண் பரிசோதனை அட்டைகள், தரமான விதைகள் வழங்க மாவட்ட நிர்வாகிகம் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

## மயிலம் பொறியியல் கல்லூரியில் ரோபோ விதைப்பு இயந்திரம் அறிமுகம்

மயிலம் : மயிலம் பொறியியல் கல்லூரியில் ரோபோ விதைப்பு இயந்திரம் அறிமுக விழா நடந்தது. இந்திய இளைஞர் சங்கம் சார்பில், மயிலம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் விதைப்பு பணிகளுக்கு ரோபோவை பயன்படுத்துவது குறித்த அறிமுக விழா நடந்தது. கல்லூரி முதல்வர் செந்தில் தலைமை தாங்கினார்.இந்திய இளைஞர் சங்க செயலாளர் பிரபாகரன், முகில்வண்ணன் முன்னிலை வகித்தனர். செந்தில்நாதன் வரவேற்றார். கல்லூரியின் உதவி பேராசிரியர் பாலாஜி தயாரித்த ரோபோ இயந்திரத்தை, முன்னாள் தமிழக டி.ஜி.பி., நடராஜ் அறிமுகம் செய்து வைத்து பேசியதாவது: மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் கனவை மாணவர்களாகிய நீங்கள் நிறைவேற்றினால் 2020ல் இந்தியா வல்லரசாகும். படிக்கின்ற போது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் வர வேண்டும். மயிலம் கல்லூரில் இயற்கையில் ரசாயன உரம் பயன்படுத்தாமல் காய்கறிகள் சாகுபடி செய்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்கள் படித்து முடித்தவுடன் பெற்றோர்களை மதிக்க வேண்டும். சமூகத்தில் அனைவரிடத்திலும் அன்பு காட்ட வேண்டும்.உங்கள் கல்லூரி பேராசிரியரை போன்று எதிர் காலத்தில் நல்ல விஞ்ஞானிகளாக உருவாக வேண்டும். இவ்வாறு நடராஜ் பேசினார்.விழாவில் பேராசிரியர் சரவணன், நிலா அறக்கட்டளை பாரதி, வசந்தராயன், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண் டனர். உடற் கல்வி இயக்குனர் ராஜி நன்றி கூறினார்.

## காய்கறிகளின் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி! பெண்கள், ஹோட்டல் நிர்வாகத்தினர் மகிழ்ச்சி

சேலம்:உள்ளூர் காய்கறிகளின் வரத்து அதிகரித்ததை அடுத்து, அவற்றின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு இருப்பது, பெண்கள், ஹோட்டல்

நிர்வாகத்தினர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.கடந்த, மே மாதம் பெய்த மழையின் காரணமாக, தமிழகத்தில், தற்போது மானாவரி தோட்டங்களில் காய்கறிகளின் அறுவடை துவங்கி உள்ளது. அதே நேரத்தில், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட தென் மாநிலங்களில் இருந்து, தமிழக மார்க்கெட்டுக்களுக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகளின், வரத்தும் அதிகரித்துள்ளது. தமிழகத்தின், பெரிய காய்கறி மார்க்கெட்டுகளான, கோயம்பேடு, ஒட்டன்சத்திரம், மதுரை, தலைவாசல், வடசேரி, கோவை, ஈரோடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மார்க்கெட்டுக்களுக்கு விற்பனைக்கு வரும் உள்ளூர் காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளது.இதில், குறிப்பாக தக்காளியின் வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை பாதியாக குறைந்துள்ளது. தமிழகத்தில், உள்ளூர் காய்கறிகளின் வரத்து அதிகரித்து வரும் நிலையில், "கேரளாவில் தமிழக காய்கறிகளுக்கு தடை விதிக்கப்படும்' என, தகவல் வெளியாகி உள்ளதால், "விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படும்' என, வியாபாரிகள் தெரிவித்தனர்.ஆனால், வெளியூர் காய்கறிகளின் விலை மட்டும் சற்று அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், வெளியூர் காய்கறிகளை வாங்கிய பொதுமக்கள், தற்போது உள்ளூர் காய்கறிகளுக்கு மாறி வருவதால், வெளியூர் காய்கறிகளின் விற்பனையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, உழவர்சந்தை மற்றும், உள்ளூர் மார்க்கெட்டுக்கு, காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதால், கடந்த, ஜூலை மாதத்தை விட, கடந்த சில நாட்களாக, விலை கணிசமாக வீழ்ச்சியை நோக்கி செல்கிறது. அதனால், பெண்கள் மற்றும் ஹோட்டல் நடத்துபவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
நேற்றைய நிலவரப்படி, சேலம் உழவர்சந்தைகளில்,

காய்கறிகளின் விலை விவரம்:உள்ளூர் காய்கறிகள் ஜூலை ஆகஸ்ட்(கிலோவில்) (கிலோவில்)

| | | |
|---|---|---|
| தக்காளி | ரூ.22 | ரூ.10 |
| மாங்காய் | ரூ.42 | ரூ.28 |
| கத்தரிக்காய் | ரூ.38 | ரூ.15 |
| கொத்தவரைக்காய் | ரூ.36 | ரூ.10 |
| பீர்க்கங்காய் | ரூ.22 | ரூ.15 |
| சுரைக்காய் | ரூ.12 | ரூ.7 |
| முள்ளங்கி | ரூ.24 | ரூ.14 |
| வெண்டைக்காய் | ரூ.20 | ரூ.12 |
| புடலங்காய் | ரூ.18 | ரூ.14 |
| பாகற்காய் | ரூ.32 | ரூ.18 |
| முருங்கக்காய் (ஒன்று) | ரூ.5 | ரூ.2 |
| வெளியூர் காய்கறிகள் | | |
| உருளைக்கிழங்கு | ரூ.16 | ரூ.24 |
| கேரட் | ரூ.34 | ரூ.42 |
| பீன்ஸ் | ரூ.44 | ரூ.50 |
| பீட்ரூட் | ரூ.22 | ரூ.28 |
| முட்டை கோஸ் | ரூ.16 | ரூ.20 |

## தொடர் மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வு: விவசாயிகள், மக்கள் மகிழ்ச்சி

பள்ளிபாளையம்:கடந்த, மூன்று நாட்களாக பள்ளிபாளையம் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அதனால், விவசாயிகள், மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.பள்ளிபாளையம் பகுதியில் பகல் வேளையில் வெப்பம் கடுமையாக தாக்குகிறது. அதனால், அனல்காற்றுக்கு தாக்குப்பிடிக்க

முடியாமல் மக்கள் வீட்டுக்குள் முடங்கிக்கிடக்கின்றனர். ஆனால், மாலை நேரத்தில், ஜில் என்று குளிர் காற்று வீசுவதுடன் மழை பெய்து வருகிறது.கடந்த, மூன்று நாட்களாக இதே நிலை நீடித்து வருகிறது. அதனால், மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்வதால், தாழ்வான பகுதியில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும், பள்ளங்களில், மழைநீர் குளம் போல் தேங்கி நிற்கிறது.பலத்த சூறாவளி காற்றுக்கு, காவேரி பகுதியில் சாலையோரம் இருந்த மரங்கள் வேரோடு சாய்ந்தது. அதேபோல், பல்வேறு பகுதிகளிலும் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளது. இந்த தொடர் மழை காரணமாக நிலத்தடி நீர்மட்டமும், கிணறுகளில் தண்ணீர் அளவும் அதிகரித்துள்ளது. அதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ரூ. 2 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

திருச்செங்கோடு:திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 3,000 மூட்டை மஞ்சள், இரண்டு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யபடுகிறது.மஞ்சள் வகைகள், தர்மபுரி மாவட்டம் அரூர், பொம்முடி, ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர், சேலம் மாவட்டம், ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேட்டூர், ஆத்தூர், தம்மம்பட்டி, மலையாளபட்டி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனைக்கு வருகிறது.இந்நிலையில், நேற்று முன்தினம், நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிக பட்சம், 9,205, குறைந்த பட்சம், 5,739 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள், அதிக பட்சம், 7,503, குறைந்த பட்சம், 5,399 ரூபாய்க்கும் ஏலம் போனது.அதேபோல்,

பனங்காலி ரகம், அதிக பட்சம், 18 ஆயிரத்து, 719, குறைந்த பட்சம், 6,000 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 3,000 குவிண்டால் மஞ்சள், இரண்டு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.

**புரதம் தேவையை அதிகரிக்க பயறு வகை பயிர் சாகுபடி செய்து அதிக வருவாய் பெற அழைப்பு**

மோகனூர்:"பயறு வகைப்பயிர்களை தனிப்பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ, ஆடிப்பட்டத்தில் பயிரிட்டு, நமக்குத் தேவையான புரதத் தேவையை அளிக்கும் இப்பயிர்களின் மூலம் நல்ல வருவாய் பெறலாம்' என, மோகனூர் வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குனர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:பயறுவகைப் பயிர்கள், நம் உடலுக்கு தேவையான புரதத்தேவையை அளிப்பதில் முன்னிலை வகிக்கிறது. பயறுவகை பயிர்கள் எல்லாவிதமான மண் மற்றும் தட்பவெப்பநிலைகளையும் தாங்கி வளரும் தன்மை கொண்டவை. பெரும்பாலும் பயிறுவகைப் பயிர்கள் ஊடுபயிராகவே பயிரிடப்படுகிறது.நெல் வயலில் வரப்பு ஓரங்களிலும், கரும்பு, சோளம், மக்காச்சோளம் மற்றும் தோட்டக்கலைப் பயிரான மரவள்ளி சாகுபடியில் ஊடுபயிராகவும் பயறுவகைப் பயிர்கள் பயிரிடப்படுகிறது. அவ்வாறு ஊடுபயிராக பயிரிடுவதால், விவசாயிகள் குறிப்பிட்ட அந்த நிலத்தில், பயறு வகைப்பயிர்கள் மூலம் கூடுதல் வருவாய் பெறுவதோடு, அந்த வயலில் களைக் கட்டுப்பாடும் சாதகமாகிறது.உளுந்து, பாசிப்பயிறு மற்றும் துவரை போன்ற பயிறு வகைப் பயிர்களின் தேவை மற்றும் நுகர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், விவசாயிகள் இப்பயிர்களை தனிப்பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிட்டு, பண்ணை சாகுபடியில் குறைந்த பரப்பில் அதிக வருவாய் பெறுகின்றனர்.இப்பயிர்களை ஊடுபயிராக பயிரிடும்போது, முக்கியப்பயிர் மற்றும் ஊடுபயிர்களின் சத்துத் தேவைகளை அறிந்து இரண்டுக்கும் தனித்தனியாக உரமிட வேண்டும். தனிப்பயிருக்கு மட்டும் உரமிடுவதால், ஊடுபயிருக்கு தேவையான சத்துக்கள் கிடைப்பதில்,

பயிர்களுக்கு இடையே போட்டி ஏற்படுகிறது. எனவே, இரண்டு பயிர்களுக்கும் அனைத்து தேவைகளுக்கும் போட்டி ஏற்படாதவாறு மண் பரிசோதனை அடிப்படையில் உரமிட்டு சாகுபடி செய்தால் இரண்டிலுமே நிறைவான மகசூல் பெறமுடியும். பயறு வகைப்பயிர்களை தனிப்பயிராகவோ, ஊடுபயிராகவோ ஆடிப்பட்டத்தில் பயிரிட்டு, நமக்குத் தேவையான புரதத் தேவையை அளிக்கும் இப்பயிர்களின் மூலம் நல்ல வருவாய் பெற வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வரத்து கணிசமாக அதிகரிப்பு உருளை கிழங்கு விலை சரிவு

ஈரோடு:உருளை கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளதால் நடப்பாண்டு விலையில் சரிவு ஏற்பட்டு இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.மசாலா உணவுகளில் இறைச்சி சுவையை வழங்குவதால், சைவ பிரியர்கள் உணவில் உருளை கிழங்கு பிரதான இடம் பிடிக்கிறது.கடந்தாண்டு விலை வெகுவாக அதிகரித்து இருந்தது. அபரிமிதமான விளைச்சல் காரணமாக, ஆறு மாதங்களில் விலை சரிந்து இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.இதன் எதிரொலியாக ஹோட்டல்களில் உணவு பண்டங்கள், பேக்கரி மற்றும் சிற்றுண்டிகளிலும் கூட உருளை கிழங்கின் பயன்பாடு அதிகரித்துள்ளது. எனவே கணிசமான அளவு விற்பனையும் உயர்ந்துள்ளது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ ரூ.13க்கு மட்டுமே விற்கப்படுகிறது.உருளை கிழங்கு மொத்த வியாபாரி இதய துல்லா கூறியதாவது:ஈரோடு நேதாஜி தினசரி மார்க்கெட்டில், 700க்கும் மேற்பட்ட மொத்த காய்கனி வியாபாரிகளில், 100 வியாபாரிகள் உருளை கிழங்கு வியாபாரம் செய்கின்றனர்.

நடப்பாண்டு ஜனவரி முதல் உருளை விலையில் ஏற்றமின்றி உள்ளது.உத்தரபிரதேசம், மஹாராஷ்டிரா மாநிலங்களில் உருளை விளைச்சல் அமோகமாக இருக்கும். கடந்தாண்டு விளைச்சல் சுமாராக

இருந்தது. எனவே அதிகபட்சமாக மொத்த விற்பனையில் ஒரு கிலோ ரூ.20 வரை விற்றது.ஆனால் இந்தாண்டு ஜன., இருந்தே வரத்து அதிகரித்துள்ளது. மொத்த விற்பனையில் கிலோவுக்கு ரூ.13 க்கு விற்கிறது. 50 கிலோ கொண்ட ஒரு மூட்டையின் விலை ரூ.700 தான்.உணவு வகைகளில் உருளை கிழங்கு பிரதான இடத்தை பிடித்துள்ளது. எனவே அதற்கு எப்போதுமே கிராக்கி இருக்கும். விலை குறைவால் ஹோட்டல், பேக்கரிகள் அதிகளவில் கொள்முதல் செய்கின்றன. எனவே தான் விலை சரிந்த போதும், விற்பனை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சை வேளாண் அதிகாரி விளக்கம் குறுவை பயிரில் பூச்சியை கட்டுபடுத்தும் முறை

தஞ்சாவூர்:"குறுவை சாகுபடியில் விவசாயிகள் ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறையை கடைப்பிடித்து அதிக மகசூல் பெறலாம்,' என, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் மேற்கொள்ளப்பட்ட பூச்சி கண்காணிப்பு நடவடிக்கைகளில் தண்டு துளைப்பான் பூச்சி, பச்சை தத்துபூச்சியின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. எனவே விவசாயிகள் ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்தி அவற்றை கட்டுப்படுத்த வேண்டும்.தண்டு துளைப்பான் பூச்சியானது நெல் நாற்றங்காலில் இலையின் நுனியில் பழுப்புநிற முட்டைகளை கூட்டமாக இடும். முட்டைகள் பாலேடு போன்ற வெள்ளை நிறமாகவும், தட்டையாகவும் முட்டை வடிவத்திலும் இருக்கும். இவை கூட்டமாக திரளாக இடப்பட்டு வெளிர் மஞ்சள் நிற இழைகளால் மூடப்பட்டிருக்கும். இவை பெரும்பாலும் இலைகளின் நுனிப்பகுதிக்கருகே வைக்கப்பட்டிருக்கும். இதனால் நாற்றின் நுனி பகுதியை வெட்டியபின் நடவு செய்ய வேண்டும்.

இந்த முட்டைகள் பொரித்து வெளிரிய மஞ்சள் நிறத்தில் கறும்பழுப்பு நிற தலை கொண்டு அதில் முன் மார்பு கவசத்துடன் கூடிய புழுக்கள் தழைப்பருவத்தில் தண்டு களில் நுழைந்து வளரும். இவை தண்டுகளை உட்கொள்வதால் அதன் நடுப்பகுதி காய்ந்துவிடும். இதுவே குருத்து காய்தல் எனப்படுகிறது. நன்கு வளர்ச்சியடைந்த பயிரின் முழு தானிய கதிர்களும் காய்ந்துவிடும். மிஞ்சியிருக்கும் தட்டையான கதிர் வெண்கதிர் எனப்படுகிறது. குருத்தை பிடித்து இழுக்கும்போது எளிதாக கையில் வந்துவிடும்.பழுப்புநிற அந்துப்பூச்சிகள் வயலில் இருக்கும். பொருளாதார சேத அளவான, 2 முட்டை திரள்கள் தழை பருவத்தில், 10 சதவீதம் தூர் அழுகல் அல்லது பூக்கும் பருவத்தில், 2 சதவீதம் வெண்கதிர்கள் காணப்பட்டால் தொடர்ச்சியாக வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும்.பொருளாதார சேத அளவுக்குமேல் சேதநிலை காணப்பட்டால், ஒரு ஏக்கருக்கு, 200 லிட்டர் நீரில் மோனோகுரோட்டாபாஸ், 200 மி.லி அல்லது பிரோபெனோபாஸ், 400 மி.லி தெளிக்கலாம். மேலும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளில் பேசில்லஸ் துருன்ஜெனிஸிஸ் வகை மற்றும் வேப்பங்கொட்டை சாற்றை கலந்து தெளித்து கட்டுப் படுத்தலாம்.பச்சை தத்துப்பூச்சியால் தாக்கப்பட்ட நெற்பயிரின் இலைகள் நுனி முதல் அடிப்பகுதி வரை முழுவதும் மஞ்சன் நிறமாக மாறிவிடும். இப்பூச்சி பயிரை முழுவதுமாக தாக்கி அதன் சாற்றை உறிஞ்சுவதால் பயிரின் வீரியம் குறைந்து வளர்ச்சி குன்றி குட்டையாக காணப்படும். பயிர் வாடுதல் அல்லது முற்றிலுமாக காய்ந்து காணப்படும். இலையுறை அல்லது நடுநரம்புகளுக்குள் வெள்ளையான அல்லது வெளிறிய மஞ்சள் நிறமான முட்டைகள் இருக்கும்.பயிரின் மேல்பகுதியில் வெளுத்த பச்சைநிற முதிர்ப்பூச்சிகள் இருக்கும். இப்பூச்சிகள் முற்றிலுமாக மகசூல் இழப்பை ஏற்படுத்தக்கூடிய துங்ரோ மற்றும் நெல் மஞ்சள் குட்டை போன்ற வைரஸ் நோய்களை பரப்புகின்றன. பச்சை தத்துப்பூச்சியை கட்டுப்படுத்த அடியுரமாக வேப்பம்புண்ணாக்கு, 12.5 கிலோவை நாற்றங்காலில் இடலாம். எனவே ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்படுத்தும்

முறைகளை கையாண்டால் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம்.இவ்வாறு, தெரிவித்தார்.

**இயந்திரம் மூலம் நாற்று நடவு பணி வேளாண் துணை இயக்குனர் ஆய்வு**

மன்னார்குடி:நீடாமங்கலம் அருகே உள்ள ராயபுரம் கிராமத்தில், இயந்திரம் மூலம் நாற்று நடவு செய்யும் பணியை, வேளாண்மை துணை இயக்குனர் மதியழகன் பார்வையிட்டார்.அப்போது, நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் கூறியதாவது:குறுவை தொகுப்பு உதவி திட்டம் மூலம், விவசாயிகளுக்கு விலையில்லாமல் இயந்திரம் மூலம் நடவு செய்து கொடுக்க, வேளாண்மை துறை தயாராக உள்ளது. மேலும், ஆகஸ்ட் மாதத்துக்குள் நடவு செய்ய வாய்ப்புள்ள இடங்களில், விவசாயிகள் நாற்று தயார் செய்து வைத்திருந்தால், அனைத்து விவசாயிகளுக்கும், அரசு செலவில் இயந்திரம் மூலம் நடவு செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக, வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.இயந்திரம் மூலம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள், தங்கள் வயல்களில் நாற்றுவிடாமல் அல்லது சொந்த வயலில், நாற்று விட முடியாதவர்கள், நாற்று விட்டு நடவு செய்து கொடுக்கும் நிறுவனங்களையும் தொடர்பு கொண்டு நடவு செய்ய நடவடிக்கை எடுக்கலாம். சொந்த வயலில் நடவு செய்ய உள்ள விவசாயிகள் நெல் நாற்று தட்டுகள் மூலமாகவோ அல்லது பாலீதீன் சீட்டுகள் மூலமாகவோ நாற்றுகளை தயார் செய்யலாம்.ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய, 70 நாற்று தட்டுகள் தேவை. பாலிதீன் சீட்டுகளாக இருந்தால், 40 சதுர மீட்டர் தேவை. நன்கு உழவு செய்யப்பட்ட நாற்றங்கால் பாலிதீன் சீட்டை பரப்பி, அதன் மேல் விதையிடும் சட்டத்தை பயன்படுத்தி, நாற்றங்காலில் உள்ள சேற்றை பூசி தயார்படுத்தி கொள்ள வேண்டும்.ஒரு ஏக்கருக்கு தேவையான, 15 கிலோ

நெல் விதையை, சீராக தூவி பின்னர் வைக்கோல் மூலம் மூட்டம் போடவேண்டும். ஐந்து நாட்கள் தொடர்ந்து, பூவாளி மூலம் தண்ணீர் தெளித்து வர வேண்டும். பின், 15 நாட்களில் நாற்றுகள் நடுவதற்கு தயாராகி விடும் இந்த நாற்றுகளை, 20 நாட்களுக்குள் நட்டு முடிக்க வேண்டும்.ஆகஸ்ட், 15 தேதிக்குள் விதைப்பு செய்யும் அனைத்து ரகங்களும் அனைத்து விவசாயிகளுக்கும் இத்திட்டம் பொருந்தும்.விதை விட்டவுடன் சிட்டா, அடங்கல் நகல்களை வேளாண்மை துறை அலுவலர்கள் அல்லது வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களிடம் ஒப்படைத்தால், நடவு செய்த ஒரு வாரத்திற்குள், விவசாயிகளுடைய கணக்கில் ஏக்கருக்கு, 2,375 வீதம் வரவு வைக்கப்படும், என்று தெரிவித்தார்.

**ஆடிப்பெருக்கு பூக்கள் விலை உயர்வு**

திண்டுக்கல்; ஆடிப்பெருக்கை யொட்டி திண்டுக்கல்லில் பூக்கள் விலை உயர்ந்தது.

திண்டுக்கல் பூ மார்க்கெட்டிற்கு ஆத்தூர், ஆ.வெள்ளோடு, ரெட்டியார்சத்திரம் பகுதிகளில் விளையும் பூக்கள் விற்பனைக்கு வருகின்றன. சென்றவாரம் வரை பூக்களின் விலை சரிந்திருந்தன. இன்று ஆடிப்பெருக்கு என்பதால் பூக்களின் விலை உயர்ந்திருந்தன.

சென்ற வாரம் கிலோ ரூ.100 க்கு விற்ற மல்லிகை ரூ.200 க்கும், ரூ.120 க்கு விற்ற கனகாம்பரம் ரூ. 300 க்கும், ரூ.25 க்கு விற்ற சம்பங்கி ரூ.200 க்கும் விற்பனையாகின. அதேபோல் கிலோ ரூ.30 விற்ற கோழிகொண்டை ரூ.50 க்கும், ரூ.30 க்கு விற்ற செண்டுமல்லிகை ரூ. 50 க்கும், ரூ.30 க்கு விற்ற ரோஜா ரூ.60 க்கும், ரூ.60 க்கு விற்ற காக்கரட்டான் ரூ.150 க்கும், ரூ.100 க்கு விற்ற முல்லை ரூ.250 க்கும், ரூ.100 க்கு விற்ற பிச்சி ரூ.200 க்கும் விற்பனையாகின.

## ஒட்டன்சத்திரத்தில் வெங்காயம்,வெண்டை விலை சரிவு

ஒட்டன்சத்திரம்:ஆடிப்பெருக்கை முன்னிட்டு ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு இன்று (ஆக.3) விடுமுறை விடப்பட்டுள்ளதால், நேற்று காய்கறி வரத்து அதிகமாக இருந்தது. இதனால் சின்ன வெங்காயம், வெண்டைக்காய் உட்பட பல காய்களின் விலை சரிவடைந்து காணப்பட்டது.

ஒட்டன்சத்திரம் காவேரியம்மாபட்டி, அம்பிளிக்கை, சாலைப்புதூரை சுற்றியுள்ள பகுதிகளில் சின்ன வெங்காயம் அதிகமாக பயிரிடப்படுகிறது. தற்போது இப்பகுதிகளில் மட்டுமின்றி, அருகில் உள்ள மாவட்டங்களிலும் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இதனால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து அதிகமாக உள்ளது. வெங்காய விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த வாரம் கிலோ ரூ.40க்கு விற்றது. நேற்று கிலோ ரூ.25க்கு விற்றது. தரம் குறைந்த வெங்காயம் ரூ.20 க்கு விற்றது. வெண்டைக்காய் வரத்த அதிகரிப்பால்,கிலோ ரூ.3க்கு விற்றது. முருங்கைக்காய் கிலோ ரூ.11க்கு விற்றது.

மார்க்கெட் விடுமுறை: ஆடிப்பெருக்கை முன்னிட்டு இன்று (ஆக.3), ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் காய்கறிகளை பறித்துக் கொண்டு இன்று வரவேண்டாம் என்று காய்கனி <கமிஷன் கடை உரிமையாளர்கள் நலச் சங்கம் அறிவித்துள்ளது. அதிக அளவு வாகனங்கள் வந்ததால் @பாக்குவரத்து நெரிŒல் ஏற்பட்டது.

## நேரடிநெல் வரிசை விதைப்பு: ரூ.5 ஆயிரம் மானியத் திட்டம்

சிவகங்கை:சிவகங்கை மாவட்டத்தில் 67 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி நடக்கிறது. 45 ஆயிரம் எக்டேரில் நேரடி விதைப்பாகவும், மானாவாரி பயிராகவும் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மழையை

எதிர்நோக்கி ஆடி கடைசி வாரம் முதல் ஆவணி 2ம் வாரம் வரை நேரடி நெல் விதைப்பு நடக்கும். நெல் மகசூலை ஒப்பிடும்போது, மாநில சராசரி மகசூல் எக்டேருக்கு 4,353 கி., அரிசி கிடைக்கிறது. மாவட்டத்தில் சராசரி மகசூல் எக்டேருக்கு 2,700 கி.,அரிசி கிடைக்கிறது. மகசூல் இடைவெளியை குறைக்க, நடப்பாண் டில் நேரடி நெல் வரிசை விதைப்பு தொழில் நுட்பத்தில் மாவட்டத்தில் 7,700 எக்டேரில் விதைக்கும் திட்டம் உள்ளது. எக்டேருக்கு ரூ.5 ஆயிரம் மானியத்தில் ரூ.385 லட்சம் வழங்கப்படுகிறது.

வரிசை விதைப்பு டிராக்டர் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இளை யான்குடி, தேவகோட்டை, கல்லல், சிவகங்கை, மானாமதுரை, சாக் கோட்டை, காளை யார்கோவில், கண்ணங்குடி வட்டாரத்தில் செயல் படுத்தப்படுகிறது. நெல் வரிசை விதைப்பால் முளைப்பு சீராக இருக் கும். பயிர் இடை வெளி நன்கு பராமரிக்கப்படுவதால் காற்றோட்டம், சூரிய வெளிச் சத்தால் நன்றாக அடிப்பகுதி (தூர்) வெடித்து அதிக மகசூல் கிடைக்கும்.எக்டேருக்கு ரூ.2,255 மானியம். வரிசை விதைப்பு முடிந்தவுடன் விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். பொட்டாஷ் உரம், களைக்கொல்லி, விதைப்பு செலவு பட்டியலை வேளாண்மை அலுவல ரிடம் விவசாயிகள் வழங்கவேண்டும். 100 எக்டரில் தனித்தனி தொகுப் பாக செயல்படுத்தப்படும் என்பதால் ஒரு விவசாயி அதிகபட்சம் 2 எக் டேர் அளவில் பயன் பெறலாம்.

இத்திட்டத்தில் சேர விரும்பும் விவ சாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களிடம் உரிய நில உடமை ஆவணங்களின் நகல்களை கொடுத்து பதிவு செய்யவேண்டும் என, கலெக்டர் மலர்விழி தெரிவித்தார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**ஆடிபெருக்கையொட்டி பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார்கள் வரத்து அதிகரிப்பு செவ்வாழை தார் ரூ.800-க்கு விற்பனை**



ஆடிபெருக்கையொட்டி பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக வாழைத்தார்கள் அதிக அளவில் குவிந்தன. ஒரு செவ்வாழை தார் ரூ.800-க்கு விற்பனை ஆனது. வாழைத்தார் ஏலம் பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இருந்தும், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு செவ்வாழை, மோரீஸ், பூவந்தார், கற்பூரவள்ளி, நேந்திரம், கதளி போன்ற அனைத்து வகையான வாழைத்தார்கள் ஏலம் விடப்படுகின்றன. ரூ.800-க்கு விற்பனை

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது. ஏலத்துக்கு பல்வேறு இடங்களில் இருந்து 1500 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டன.

அதிகபட்சமாக செவ்வாழை தார் ரூ.300 முதல் ரூ.800 வரைக்கும், பூவந்தார் ரூ.200-450, மோரீஸ் ரூ.100-400, நேந்திரம் கிலோ ரூ.37-க்கும், கற்பூர வள்ளி ரூ.300 முதல் ரூ.600, கதளி கிலோ ரூ.27-க்கும் ஏலம் போனது.

விலை அதிகரிப்பு

இதுகுறித்து வாழைத்தார் வியாபாரி ஒருவர் கூறிய தாவது:-

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கடந்த ஏலங்களில் வாழைத்தார் வரத்து குறைவாக இருந்தது. சுமார் 1200 தார்கள் தான் விற்பனைக்கு வந்தன. ஆனால் நேற்று நடந்த ஏலத்துக்கு 1500 வாழைத்தார்கள் வந்தன.

ஆடிப்பெருக்கு பண்டிகை இன்று (திங்கட்கிழமை) கொண்டாடப்படுவதால் கடந்த வாரத்தை விட வாழைத்து வரத்து அதிகமாக இருந்தது. பொதுவாக வரத்து அதிகமாக இருந்தால் விலை குறைந்து காணப்படும். ஆனால் நேற்று வரத்து அதிகரித்தும், விலை அதிகமாக இருந்தது. அதிகபட்சமாக செவ்வாழை ரூ.800-க்கு விற்பனை ஆனது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் சின்னவெங்காயம் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி**



<u>ஒட்டன்சத்திரம்,</u>

ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பால் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.சின்னவெங்காயம் வரத்து

ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட் தென்தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இந்த மார்க்கெட்டிற்கு ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்தும், அருகில் உள்ள மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா, மராட்டியம் ஆகிய வெளிமாநிலங்களில் இருந்தும் காய்கறிகள் இங்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இந்த மார்க்கெட்டில் இருந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுககும், கேரளா மாநிலத்திற்கும் அதிக அளவு காய்கறிகளை வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளான முத்துநாயககன்பட்டி, ஜவ்வாதுபட்டி, சோளியப்பகவுண்டனூர், இடையகோட்டை, பூவாய்பாளையம், குளிப்பட்டி, செம்மடைப்பட்டி

ஆகிய பகுதிகளில் மழை பெய்தது. அதனால் அந்த பருவத்தில் சின்னவெங்காயம் மட்டுமே நடவு செய்யும் நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டது. இதனால் அந்த பகுதியில் இருந்து ஏராளமான சின்னவெங்காயம் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரத் தொடங்கியது.

<u>விலை வீழ்ச்சி</u>

இதனால் மார்க்கெட்டில் வரத்து அதிகரித்து சின்னவெங்காயம் விலை திடீரென்று வீழ்ச்சி அடைந்தது. கடந்த சில தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.45–க்கு விற்பனை செய்யப்பட்ட சின்னவெங்காயம் நேற்று கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனையானது. இதனால் சின்னவெங்காயம் நடவுக்கு செலவு செய்த பணத்தைக் கூட பெற முடியாத நிலை ஏற்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

எனவே மத்திய, மாநில அரசுகள் நடவடிககை எடுத்து சின்னவெங்காயத்திற்கு நல்ல விலை நிர்ணயம் செய்ய வேண்டும் அல்லது விலை குறையும் போது அதனை ஏற்றுமதி செய்யவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வேளாண்மை துறை சார்பில் எந்திரம் மூலம் நெல் நடவு பணி**



ஈரோடு,

வேளாண்மை துறை சார்பில் எந்திரம் மூலம் நெல்நடவு பணி தொடக்க விழா ஈரோடு அருகே உள்ள பாலக்காட்டூர் கிராமத்தில் நடந்தது. விவசாயி குமரேசனின் வயலில் நடந்த நெல்நடவு பணிகளை மாநகராட்சி துணை மேயர் கே.சி.பழனிச்சாமி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இதுகுறித்து ஈரோடு வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி கூறியபோது, '15 நாட்களான நெற்பயிர்களை எந்திரம் மூலம் நடவு செய்யலாம். ஒரு ஏக்கர் நடவு செய்ய ரூ.3 ஆயிரத்து 600 வசூலிக்கப்படுகிறது. இம்முறையினை ஊக்குவிக்க தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. ஈரோடு வட்டாரத்துக்கு 750 ஏக்கர் பரப்புக்கு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது' என்றார்.

நிகழ்ச்சியில், ஊமாரெட்டியூர் வங்கி தலைவர் பாலசுப்பிரமணியம், செயலாளர் செங்கோட்டையன், வேளாண்மை அலுவலர் ராஜாத்தி, சசிகலா, உதவி வேளாண்மை அலுவலர்கள் சுதர்சன், கோவிந்தன், செந்தில்குமார், சூரியம்பாளையம் விவசாய குழு செயலாளர் செல்வராஜ் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பரமத்திவேலூர் சந்தையில் நாட்டுக்கோழி விற்பனை ஜோர் ஆடி-18 பண்டிகை எதிரொலி**



பரமத்திவேலூர்,

ஆடி-18 பண்டிகை எதிரொலியாக நேற்று பரமத்திவேலூர் கோழிச்சந்தையில் நாட்டுக்கோழியின் விற்பனை ஜோராக நடைபெற்றது.

கோழிச்சந்தை

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை நாட்டுக்கோழி சந்தை நடைபெறுவது வழக்கம். இந்த சந்தைக்கு பரமத்திவேலூர், மோகனூர், கரூர், பாளையம், வெள்ளியணை, பாலவிடுதி தரகம்பட்டி, வையமலை, எல்லைமடை, திருச்செங்கோடு, ஜேடர்பாளையம், சோழசிராமணி, குன்னமலை, பரமத்தி, எஸ்.வாழவந்தி, பாலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான நாட்டுக்கோழிகள் கொண்டு வரப்படுகிறது. மேலும் பரமத்திவேலூர் சுற்றுவட்டார பகுதியிலும் ஏராளமான சண்டைக்கு பயன்படுத்தப்படும் கோழிகள் வீடு மற்றும் தோட்டப் பகுதிகளில் வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த பகுதியில் உள்ள சண்டைக்கோழிகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால் சண்டைக் கோழிகளை வாங்குவதற்கு வெளியூர்களில் இருந்து ஏராளமானோர் வந்து செல்கின்றனர். விற்பனை ஜோர்

நேற்று நடைபெற்ற சந்தையில் பெறுவிடை, கீரி, கடகநாத் குருவக்கோழி, அசில், கருந்சதை, மயில், காகம், கருங்கண், கிளிமூக்கு, கிரிராஜா போன்ற பல்வேறு வகையான நாட்டுக்கோழிகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. நேற்று அதிகாலை 5 மணியில் இருந்து கோழிச்சந்தை தொடங்கி காலை 10 மணி வரை நடைபெற்றது. நாமக்கல், கரூர் மற்றும் திருச்சி மாவட்ட பகுதிகளில் இருந்து ஏராளமானோர் வந்து கோழிகளை வாங்கி சென்றனர். நாட்டுக்கோழிகள் கிலோ ஒன்று ரூ.300 முதல் ரூ.400 வரை விற்பனையானது. சண்டைக்கோழிகள் ரூ.ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை ரகத்திற்கு தகுந்தவாறு விற்பனை செய்யப்பட்டது.

ஆடி-18 பண்டிகையை இன்று நடைபெறுவதையொட்டி நாட்டுக்கோழி சந்தைக்கு வழக்கத்தை விட அதிக அளவில் வியாபாரிகள் கோழிகளை கொண்டு வந்திருந்தனர். நாட்டுக்கோழிகளை வாங்கவும், வழக்கத்தை விட அதிக அளவில் நாட்டுக்கோழி பிரியர்கள் வந்து வாங்கி சென்றனர். இதனால் விற்பனை ஜோராக நடைபெற்றது. இதுகுறித்து நாட்டுக்கோழி பிரியர்கள் கூறுகையில், கிராமப்புறங்கள் மற்றும் தோட்டப் பகுதிகளில் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகள் மிகவும் சுவை உள்ளதாக இருக்கும். மேலும் புத்துணர்ச்சியும், தேக பலம் ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

**இயற்கை முறையில் பாகற்காய் சாகுபடி விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி**



மசினகுடி,

மசினகுடி பகுதியில் இயற்கை முறையில் பாகற்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இயற்கை முறை

மலை மாவட்டமான நீலகிரியில் தற்போது உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட் உள்ளிட்ட மலை காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி

செய்யப்பட்டு வருகிறது. தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள மலை காய்கறிகள் அறுவடைக்கு பின்னர் மேட்டுப்பாளையம், ஊட்டி பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொண்டு செல்கிறார்கள். அங்கிருந்து வெளிமாவட்டங்கள், மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த நிலையில் மசினகுடி மற்றும் வாழைத்தோட்டம் பகுதியில் சில விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் பெறுவதற்காக தங்களது நிலங்களில் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வாழைத்தோட்டம் கிராமத்தில் உள்ள விவசாயிகள் முதற்கட்டமாக பாகற்காயை பந்தல் அமைத்து இயற்கை வேளாண்மை முறையில் சாகுபடி செய்தனர். நிலத்தில் விதை விதைக்கப்பட்டு 60 நாட்களில் பாகற்காய் கொடியானது நன்றாக வளர்ந்து காய்களை காய்க்க தொடங்கி உள்ளன.

விளைச்சல் அமோகம்

இந்த பாகற்காய் செடிகளுக்கு எந்தவித பூச்சிக்கொல்லி மருந்துகளும் தெளிப்பதில்லை. நோய் தாக்கினாலும் பசுமாட்டின் சாணம், பஞ்ச காவியம், ஜீவாமுர்தம் போன்ற இயற்கை மருந்துகளை பயன்படுத்தி கட்டுபடுத்தி வருகின்றனர். மேலும் சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சியும் வருகின்றனர். இதனால் பாகற்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:– இயற்கை வேளாண்மை முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ளதால் பாகற்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. தொடர்ந்து பாகற்காயை 4 நாட்களுக்கு ஒரு முறை 2 மாதங்கள் வரை பறிக்க முடியும். இங்கு அறுவடை செய்யப்படும் பாகற்காய்கள் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும், கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. தற்போது ஒரு கிலோ பாகற்காய் ரூ. 20 முதல் ரூ.30 வரை விற்பனையாகிறது.

குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதால் மற்ற விவசாயிகளையும் இயற்கை முறையில் சாகுபடி செய்ய கூறி வருகிறோம். மேலும் மற்ற

காய்கறிகளையும் இயற்கை முறையில் சாகுபடி செய்ய முயற்சி மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

தினகரன்

**விவசாயிகளுக்கு இடுபொருட்கள், பயிர்க்கடன் கலெக்டர் தலைமையில் ஆலோசனை கூட்டம்**

ஈரோடு, : விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் விதை நெல், உரம் போன்றவற்றை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் இருப்பு வைத்து தடையின்றி விநியோகம் செய்வது தொடர்பாகவும், பயிர்க்கடன் வழங்குவது தொடர்பாகவும் ஆய்வுக்கூட்டம் நேற்று ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இந்த கூட்டத்தில் கலெக்டர் பிரபாகர் தலைமை தாங்கி பேசுகையில், 'மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயிகளுக்கு நடப்பு பருவத்திற்கு தேவையான இடுபொருட்களான விதைநெல், உரங்கள் போன்றவை இருப்பு வைத்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நடப்பு தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிகளுக்கும், எதிர்வரும் நாட்களில் கீழ்பவானி பாசன பகுதிக்கும் ஏற்ற நெல் ரகங்களான ஏ.எஸ்.டி.16, கோ-50, கோ-51, ஏ.டி.டி-39, கோ-43, ஏ.டி.டி.38, ஏ.டி.டி.50, வெள்ளை பொன்னி, கோ-48, கோ-49, ஏ.டி.டி.44 போன்ற ரங்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கட்டாயமாக விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் பெவிஸ்டின் அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் மருந்தினை விதை நேர்த்தி செய்துதான் விதைக்க வேண்டும்.

மேலும் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை தங்கள் பகுதி வேளாண்துறை களப்பணியாளர்களை அணுகி பயன் பெற கேட்டுக் கொண்டுள்ளார். இந்த கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஸ்வநாதன் மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

**உளுந்தூர்பேட்டையில் நள்ளிரவில் பலத்த மழை**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த இரண்டு நாட்களாக பகல் நேரங்களில் கடுமையான வெயிலின் தாக்கம் இருந்தது. மாலை நேரங்களில் லேசான மழை பெய்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள எலவனாசூர்கோட்டை, களமருதூர், திருநாவலூர் உள்ளிட்ட கிராமங்களில் பலத்த மழை பெய்தது. காற்று, இடி, மின்னலுடன் பெய்த மழை அதிகாலை வரையில் சுமார் 4 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. தொடர்ந்து நேற்று காலை 11 மணி வரையிலும் மேக மூட்டத்துடன் சாரல் மழை பெய்து வந்தது.

நள்ளிரவில் மழை பெய்து வந்தபோது பின்னல்வாடி கிராமத்தில் வசித்து வந்த வீராசாமி மகன் கோவிந்தன் (75) என்ற கல் உடைக்கும் கூலித் தொழிலாளி வீட்டில் இடி விழுந்துள்ளது. இதில் இவரது கூரை வீடு தீப்பிடித்து எரிந்ததுடன் கோவிந்தனும் படுகாயம் அடைந்து மயங்கி விழுந்தார். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர். அங்கு அவர் பரிதாபமாக உயிரிழந்தார். மழையினால் மானாவாரியாக மணிலா பயிர் வைத்து இருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**சிறப்பு அரவை பருவத்திற்கு கரும்பு டன்னுக்கு ரூ2,300**

விழுப்புரம், : சிறப்பு அரவை பருவத்திற்கு விலை நிர்ணயம் குறித்து ஆலை நிர்வாகத்துடன் நடந்த பேச்சுவார்த்தையில் கரும்பு டன்னுக்கு ரூ2,300 வழங்கப்படும் என்று ஆலை நிர்வாகம் உறுதியளித்துள்ளது.முண்டியம்பாக்கம் மற்றும் செம்மேடு தனியார் சர்க்கரை ஆலையின் சிறப்பு அரவை பருவத்திற்கு கரும்புவிலை சம்மந்தமாக விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு முதன்மை அரவை பருவத்திற்கு வழங்கியதை போலவே சிறப்பு அரவை பருவத்திற்கும் கரும்பு டன்னுக்கு ரூ2,300 வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

சர்க்கரை விலை வீழ்ச்சியடைந்து மற்றும் விற்க முடியாத சூழ்நிலையுள்ளதால் இவ்விலையை ஏற்க ஆலை நிர்வாகம் முதலில் மறுத்துவிட்டு பின்னர் விவசாயிகளின் தீவிர முயற்சியால் அவர்கள் கேட்ட ரூ2,300 விலையை கொடுக்க சம் மதம் தெரிவித்துள்ளது. மேலும் நடைமுறையில் உள்ளவாறே ஒரே தவணையில் பணத்தை வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் கேட்டுக்கொண்டனர். முண்டியம்பாக்கம் கரும்பு விவசாயிகள் சங்கத்தலைவர் கோவிந்தன், உறுப்பினர்கள் கலிவரதன், பரமசிவம், ராஜாராமன், மண்ணாங்கட்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**சத்துணவு முட்டை கொள்முதல் விலை ரூ.4.35 ஆக நிர்ணயம்: பண்ணையாளர்களே சப்ளை செய்ய புதிய நிபந்தனை**




நாமக்கல்: தமிழகத்தில் சத்துணவு திட்டத்திற்கு சப்ளை செய்யப்படும் முட்டைக்கான கொள்முதல் விலை ரூ.4.35 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது பண்ணையாளர்களே நேரடியாக சப்ளை செய்யும் வகையில் புதிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் சத்துணவு திட்டத்தில் வாரம் 5 முட்டை பள்ளி குழந்தைகளுக்கு இலவசமாக போடப்படுகிறது. இதற்காக ஆண்டுக்கு 120 கோடி முட்டைகளை அரசு கொள்முதல் செய்கிறது. சத்துணவு மையங்களுக்கு ஆண்டு முழுவதும் முட்டை சப்ளை செய்யும் டெண்டர் திருச்செங்கோட்டை சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தினர் நாமக்கல்லை சேர்ந்த 110 கோழி பண்ணையாளர்கள் மூலம் முட்டை சப்ளை செய்கின்றனர். கடந்த ஆண்டு ஒரு முட்டையை அரசு ரூ.4.51க்கு கொள்முதல் செய்தது. கடையில் விற்பனை செய்யப்படும் முட்டை விலையை விட இந்த விலை அதிகமாக இருப்பதாகவும், முட்டை கொள்முதலில் ஆண்டுக்கு ரூ.100 கோடி ஊழல் நடப்பதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இந்நிலையில் இந்த ஆண்டு ஒரு முட்டை ரூ.4.35க்கு அரசு கொள்முதல் செய்கிறது.

கடந்த ஆண்டை விட விலை குறைந்துள்ளதால் டெண்டர் எடுத்த தனியார் நிறுவனத்தினர், கோழிப்பண்ணையாளர்களிடம் கெடுபிடிகளை காட்ட தொடங்கியுள்ளனர். தற்போது பண்ணையாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வாரம் 2 முறை சத்துணவு முட்டையை இறக்கி வைக்கின்றனர். இனிமேல் பள்ளிகளுக்கே நேரடியாக பண்ணையாளர்கள் சப்ளை செய்யவேண்டும் என டெண்டர் எடுத்த நிறுவனம் பண்ணையாளர்களை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக நேற்று முன்தினம் நாமக்கல் கருங்கல்பாளையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 44 கிராம் முட்டைக்கு ரூ.3.29, 40 கிராம் வரை உள்ள முட்டைக்கு ரூ.3.10 அதற்கும் குறைவான எடை உள்ள முட்டைக்கு 280 காசு தரப்படும். என்.இ.சி.சி விலையை அடிப்படையாக வைத்து முட்டைக்கு பணம் கொடுக்க முடியாது என டெண்டர் எடுத்த நிறுவனத்தினர் கூறினர். கோழிப்பண்ணையாளர்கள் மறுத்தால் ஆந்திராவில் இருந்து முட்டை வாங்கி வந்து சத்துணவு மையங்களுக்கு சப்ளை செய்ய தனியார் நிறுவனத்தினர் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இது குறித்து பண்ணையாளர்கள் கூறும்போது, பி.டி.ஓ அலுவலகத்துக்கு பண்ணையாளர்கள் சப்ளை செய்யும் முட்டையை அங்குள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சரிபார்த்து பின்னர் பள்ளிகளுக்கு அனுப்பி வைப்பார். பண்ணையாளர்களே நேரடியாக சத்துணவு மையங்களுக்கு முட்டை சப்ளை செய்யவேண்டும் என அறிவித்திருப்பது மேலும் பல முறைகேடுகளுக்கு வழிவகுக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.